பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

18 03 2026 WEDNESDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாடு முழுவதும் 33 ஆயிரத்து 660 கோடி ரூபாய் செலவில் தொழில் பூங்காக்களை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. தமிழகத்தில் இதுவரை உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 42 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

3. மாநிலத்தில் அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக திமுக கூறியுள்ளது.

4. தமிழகத்தின் வளர்ச்சிக்காக 14 லட்சம் கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கியுள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

5. ஸ்பெயின் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Nitesh Kumar காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் 33 ஆயிரத்து 660 கோடி ரூபாய் செலவில் தொழில்பூங்காக்களை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இந்த திட்டத்தின் கீழ், தொழில் முதலீட்டாளர்கள் நேரடியாக தொழில்புரிவதற்கான அனைத்து வசதிகளும் கொண்டதாக இந்த பூங்காக்கள் ஏற்படுத்தப்படும் என்றார்

சிறிய அளவிலான நீர்மின் உற்பத்தி மேம்பாட்டு திட்டத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

2 ஆயிரத்து 584 கோடி ரூபாய் செலவில் அடுத்த 5 ஆண்டுகளுக்கு இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் கூறினார்.

இதற்காக பருத்திக் கழகத்திற்கு ஆயிரத்து 718 கோடி ரூபாய் வழங்குவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மாநிலம் முழுவதும் பறக்கும் படையினர் மற்றும் கண்காணிப்புக் குழுக்கள், வாகன சோதனையில் ஈடுபட்டு வருவதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுவரை உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 42 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2 கோடியே 37 லட்சம் ரூபாய் ரொக்கப்பணமும், 18 லட்சம் ரூபாய் மதிப்பிலான மதுபானங்களும், 20 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்களும் இதில் அடங்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்தலில், புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள், மாற்று ஆவணங்களை பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம். பாஸ்போர்ட், புகைப்படத்துடன் ஓய்வூதிய ஆவணம், பான் கார்டு உள்ளிட்ட 12 மாற்று ஆவணங்களை பயன்படுத்தி, வாக்காளர்கள் வாக்களிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் அடையாள அட்டை வைத்திருந்தாலும், வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெற்றிருந்தால் மட்டுமே வாக்களிக்க முடியும் என்றும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

வாக்குச்சாவடி சீட்டு, வாக்குப்பதிவு தொடங்குவதற்கு 5 நாட்களுக்கு முன்னர் விநியோகம் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், ஒற்றுமையாக ஓரணியில் இருக்கும் வரை, இந்த சாதனைப் பயணம் தொடரும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தின் வளர்ச்சிக்காக மத்திய அரசு 14 லட்சம் கோடி ரூபாயை வழங்கியுள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இன்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உண்மைநிலை இவ்வாறிருக்க, மத்திய அரசு தமிழகத்திற்கு எதுவும் வழங்கவில்லை என்று திமுக பொய்ப்பிரச்சாரத்தில் ஈடுபடுவதாக குறை கூறினார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றும் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

>>>>><<<<<

சமையல் எரிவாயு உற்பத்தி 40 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை தெரிவித்த பெட்ரோலியத்துறை இணைச்செயலர் திருமதி. சுஜாதா சர்மா, நாடுமுழுவதும் சமையல் எரிவாயு தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

நாடுமுழுவதும் பெட்ரோல் நிரப்பும் மையங்கள் வழக்கம் போல் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மாநிலங்களுக்கு, கூடுதலாக 10 சதவீத வணிக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஒதுக்க மத்திய அரசு தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நகர்ப்புற பகுதியில் உள்ள சமையல் எரிவாயு நுகர்வோர்கள், குழாய் மூலம் சமையல் எரிவாயு இணைப்பை பெறுமாறும் திருமதி. சுஜாதா சர்மா கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

நீலகிரி மாவட்டம், காட்டேரி பூங்காவில் கோடை சீசனுக்காக வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட 2 லட்சம் மலர் நாற்றுகளை நடவு செய்யும் பணி இன்று தொடங்கியது.

இந்த மலர்ச்செடிகள் ஏப்ரல் மாத இறுதிக்குள் பூத்துக்குலுங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – சரவணன் 43 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மைய தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட – துரை 33 செகண்டஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் திரு. இளம் பகவத் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

நெல்லை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் முன்னேற்பாடுகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம், பொதுப்பார்வையாளர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபட விரும்பும் முன்னாள் படைவீரர்கள், அவர்களுக்கான நல அலுவலகத்தை அணுகுமாறு ஆட்சியர் திரு. பிரதாப் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

ஈரோடு மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில், பள்ளி மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டத்தில் தேர்தலை ஒட்டி, வங்கியாளர்களுக்கான நடத்தை நெறிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

திருவாரூர் மாவட்டத்தில் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் தேர்தல் பார்வையாளர் திருமதி. அனுபமா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் திரு. சதிஷ் தலைமையில் நடைபெற்றது.

>>>>><<<<<

திண்டுக்கல் மாவட்டம், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி கோவில் ரோப் கார் சேவை, பராமரிப்பு பணிகள் காரணமாக, நாளை மறுநாள் நிறுத்தி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஸ்பெயின் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Nitesh Kumar காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 21-16 என்ற செட்கணக்கில் பெருவின் Gerson Jair Vargas Lostaunaul-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் துளசிமதி முருகேசன், மனிஷா ராமதாஸ் மற்றும் Neeraj காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா முதலிடத்தில் நீடிக்கிறார்.

பந்து வீச்சுப் பிரிவில் வருண் சக்கரவர்த்தி தொடர்ந்து இரண்டாவது இடத்தில் உள்ளார்.

>>>>><<<<<

கென்யாவில் நடைபெற்ற சர்வதேச கார் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Naveen - Musa இணை வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Ayush Shetty காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் Anmol Kharb-யும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

>>>>><<<<<

இந்தியன் ஓப்பன் ஸ்குவாஷ் போட்டி இன்று மும்பையில் தொடங்கியது.

>>>>><<<<<

ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டிக்கான பயிற்சிக்காக இந்திய அணியின் இரண்டாவது குழுவினர் மங்கோலியா சென்றடைந்தனர்.

>>>><<<<<